அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண் :174/2016
தேதி.:16/11/2016

## கருப்பு பணத்தை ஒழிப்பதற்கு மோடி அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்றாலும், கருப்பு மை வைப்பது ஏற்றுக்கொள்ளமுடியாத தவறான அணுகுமுறை, பொதுமக்களை மேலும் குழப்பத்தில் தள்ளும் முயற்சி.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கண்டனம்.

ரூ.1000 மற்றும் ரூ.500 நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் மோடி அவர்கள் கடந்த 8-ஆம் தேதி அறிவித்ததை தொடர்ந்து, கருப்பு பணம் இல்லாத பொதுமக்கள் வங்கிகளில் அலைமோதுகிறார்கள். அஞ்சலகம், பெட்ரோல் நிலையம் போன்ற அரசு அறிவித்த இடங்களிலும் நீண்ட வரிசையில் நின்று பெரும் அவதிக்குள்ளாகிறார்கள்.

இந்த நிலையில் மாத ஊதியத்தை எதிப்பார்த்துக்கொண்டிருக்கும் நடுத்தர ஏழை மக்கள் 1 முதல் 15 ஆம் தேதிக்குள் அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். சிறு குறு வியாபாரிகள் வணிகர்கள் 10 ஆம் தேதிதான் சம்பள நாளாக வைத்திருக்கும் சூழ்நிலையில், 8 ஆம் தேதி இந்த அறிவிப்பு என்பதே பல சிக்கல்களை உருவாகியிருக்கிறதை பார்க்கிறோம்.

வங்கிகளில் பணத்தை மாற்றுவதற்கு சென்றால் பணம் வரவில்லை, நீண்டநேரம் காத்திருப்பு போன்ற குழப்பங்களும், நேரம் வீணாவது, உற்பத்தித்திறன் பாதிக்கப்படுவது போன்ற குழப்பத்தில் இருந்தவர்களுக்கு மேலும் ஒரு குழப்பமாக விரலில் 'மை' வைக்கப்படும் என்று நிர்ணயித்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும்.

ஒருவருக்கு தேவையான அடையாள அட்டையை சரிப்பார்த்தபின்பு அவருக்கு ரூ.4,500 மட்டும் பணம் மாற்றுவதற்கு அனுமதி. இந்த நிலையில் ஒருவரே பலமுறை வந்து பணம் மாற்றுவதை தடுக்க விரலில் அழியாத மை வைக்கப்படும் என்றால் ஒருவர் வெறும் ரூ.4,500 மட்டுமே மாற்றமுடியும். இந்த 4,500 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு குடும்பத்திற்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து சமாளிக்க முடியுமா ?

கருப்பு பணத்தை வைத்திருக்கும் 10 சதவிகிதம் பேரை கண்டுபிடிப்பதற்காக நாட்டில் உள்ள 90 சதவிகித நடுத்தர மக்கள், விவசாய, சாமானிய மக்களை அலைக்கழிக்க வைக்கும் இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும்.

மேலும் பணத்தை மாற்றும் நடவடிக்கையில் நேரத்தை பார்க்காமல் மிக கவனமாக செயல்பட்டுவரும் வங்கி ஊழியர்களுக்கு விரலில் மை வைக்கும் பணியை கூடுதலாக வழங்கப்பட்டிருப்பது அவர்களே ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளார்கள். மை வைக்கும் பணி அமலுக்கு வந்தாலும் சில வங்கிகளில் பணமும் வரவில்லை, மையும் வரவில்லை.

குழப்பங்கள் தீராத நிலையில், பணத்தை மாற்றும்போது விரலில் மை வைக்கும் நடவடிக்கை மற்றும் கருப்பு பணத்தை ஒழிக்க இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது கண்டனத்திற்குரியது.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்